**தலைப்பு 225 – இலங்கை பொலிஸ்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பொலிஸின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 885,556,999 தொகை ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 805,583,741 தொகையாக இருந்தது. அதன்படி ரூபா 79,973,258 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசத்தை இனங்கண்டு சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்தம் வழுக்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதனால் 2015 ஆண்டு முதல் வித்தியாசங்கள் படிப்படியாக குறைவடைகின்றது. | மீதிகளின் வித்தியாசங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் வருட இறுதியில் உள்ளவாறு பெறுமதி ACA – 6 படி ரூபா 26,160,839,028 தொகையாக காணப்பட்டதுடன், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரியின் சொத்துகள் கூற்றின் படி பெறுமதி ரூபா 41,946,843,876 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 15,786,004,848 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2021 ஆண்டில் இந்த வழுவை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிய வேண்டியதுடன், விரைவாக சரி செய்ய வேண்டும். |

**(இ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததெனவும், சட்டத்தின் 38(2) பிரிவின் பிரகாரம் அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் | நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக துணைக் கணக்கு அலகுகளில் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகள் மூலம் கண்டறியப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான மாற்றங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு தேவையான வித்தியாசங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை பொலிஸினால் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி பொலிஸ் வட்டாரத்தில் 78 கட்டடங்களுக்காக செலுத்த வேண்டியிருந்த நிலுவை வீதவரித் தொகை ரூபா 2.37 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் கண்டி பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் வட்டார அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்திற்காக மாத்திரம் நிலுவை வீதவரி தொகை ரூபா 1.83 மில்லியன் ஆகும். | நிலுவை பில் பத்திரங்களை பெற்றுக்கொண்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து இந்த நிலுவைத் தொகையை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்படும். | நிலுவை வீதவரியினை விரைவாக தீர்க்க வேண்டும். |

### 2.2 பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் 2 (ஈ) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் காணப்பட்டால் மாத்திரம் சேவைகள் அல்லது வழங்கல்களுக்காக ஈடுபாட்டுப் பொறுப்பு எதற்கும் கடப்பாடு ஒன்றினை ஏற்படுத்தி இருக்கக் கூடாது எனினும், நடைமுறை ஆண்டின் போது 05 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 16,133,896 தொகை மற்றும் 05 மூலதன செலவு | பொது மக்களுக்குத் தேவையான சேவைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக அத்தியவசியமான செலவுகளுக்காக ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்வதற்காக முழு முயற்சியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | ஏற்பாட்டு எல்லைகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. |

விடயங்களுக்காக ரூபா 134,046,332 தொகையாக 10 செலவு விடயங்களின் ஏற்பாடுகளை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 150,180,228 தொகை பொறுப்புக்களுக்காக அணுகியிருந்தது.

## 2.3 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணங்கள் திணைக்களப் புத்தகங்களின் படி மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி ஒன்று காணப்படாத போதிலும் கட்டடங்கள் பிரிவினால் ஹபராதுவ நில செவண வீடுகள் கொள்வனவு செய்வதற்காக 2019 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 500 மில்லியன் தொகை மற்றும் நிர்மாண வேலை செயற்திட்டங்களுக்காக ரூபா 85.68 மில்லியன் தொகை முற்பணம் என காணப்பட்டதுடன் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 192 வீட்டு அலகுகள் கொள்வனவு செய்வதற்காக முற்பணம் என ரூபா 500 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. விற்பனையாளர் குறிப்பிட்ட தினத்தில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யாமையால் கட்டடங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 ஆண்டின் போது சார்க் தீவிரவாத மற்றும் போதைப்பொருள் குற்றங்களை அவதானிக்கும் நிலையம் நிர்மாணிப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 11,503,192 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல் 07 வருடங்களுக்கு மிகையான காலம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | புதிதாக பாதுகாக்கப்பெற்ற தரவு களஞ்சியம் ஒன்று நிர்மாணிப்பதற்காக பயன்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டிருப்பதால் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் V பகுதியில் அடங்கியுள்ள ''பணம்'' சம்பந்தமான அலுவல்களுக்கு உரிய ''தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவன நிதியம்'' நிறுவுவதற்காக மற்றும் சட்டத்தின் அதற்குரிய 22 முதல் 28 வரையான கருமங்கள் மற்றும் செய்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மூலம் இந்த நிதியம் நிறுவுவதற்காக தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ''நிதியம்'' நிறுவி உரிய குறித்தொதுக்கியவாறு செயற்பட வேண்டும். |
| (ஆ) | பொலிஸ் வெகுமதி நிதியம் தவிர இலங்கை பொலிஸின் கீழ் நியதிச் சட்டத்தின் படி அல்லாத 61 நிதியங்கள் காணப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த நிதியங்களின் காசு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 103.37 மில்லியன் தொகையும் நிலையான வைப்புக்களில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 331.93 மில்லியன் தொகையும் காணப்பட்டது. இந்த நிதியம் தொடர்பான நிதிய முகாமைத்துவம் பாதீடு, கணக்கீடு செய்தல், நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக நிதிப் பிரமாணம் 876 மற்றும் 877 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொலிஸ் சுகசீவிய நிதியம் உத்தியோகத்தர்களின் நலனோம்பு தேவைகளுக்காக பேணிச் செல்வதற்கு நேரிடுகின்றது. அந்த நிதியம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான தேவைப்பாடு மற்றும் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய 16 துறைகள் 2014 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டது. நிகழ்கால மற்றும் எதிர்கால சமூக மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு பொருந்தக் கூடிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட்டு திருத்துவதற்காக 2014 நவம்பர் 19 ஆம் திகதி அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், 2021 ஜூன் மாதம் வரை சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | பொது மக்கள் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் விசாரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட துறைகள் தொடர்பாக சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொலிஸிற்காக பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவதற்காக 2015 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டதுடன் உத்தேச பல்கலைக் கழகத்திற்காக அத்திடிய பிரதேசத்தில் 16 ஏக்கர் காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக பிரித்தானிய நோட்டன்ஹெம், லிவர்பூழ் போலவே அவுஸ்திரேலிய டீகின் பல்கலைக்கழகங்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு தேவையான சட்டம் அங்கீகரித்துக் கொள்வதற்காக 2021 ஜூன் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய பொலிஸ் மற்றும் குற்றவியல் நியாய பல்கலைக் கழகம் நிர்மாணிப்பதற்காக சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக் கழகம் நிறுவுவதற்குரிய சட்ட விடயங்கள் விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொலிஸில் தற்காலத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை இனங்கண்டு உரிய முறையில் நாளது வரை ஆக்குவதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதற்கும் எதிர்காலத்தில் சிறந்த மற்றும் செயற்திறனுடைய பொலிஸ் சேவை ஒன்றை நாட்டில் | ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் ஆய்வு மேற்கொள்ளல், பரிந்துரைகள் சமர்ப்பித்தல், விடயப் பரப்பை இனங்காணல், புள்ளிவிபரங்கள் தரவுகள் சேகரித்தல் போன்ற | இனங்கண்டிருந்த மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவுவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கும் குறிக்கோளுடன் நிறுவப்பட்டிருந்த குழுவின் அறிக்கை ‘‘பொலிஸ் மறுசீரமைப்பு செயற்பாட்டுத் திட்டம்’’ என 2017 மே 31 திகதி வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஜுன் வரை செயற்படுத்தி இருக்கவில்லை. | விடயங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | தண்டப் பணம் அறவீடு செய்வதை விரைவுபடுத்தலும் அரச வருமானத்திற்கு சேகரிக்கப்படும் தண்டப்பணத் தொகையை அதிகரிப்பதற்கும் பொது மக்களுக்கு தண்டப் பணம் செலுத்துவதை இலகுபடுத்தும் குறிக்கோளுடன் வாகன குற்றங்களுக்காக தன்னியக்க தண்டப்பண கொடுப்பனவு நடைமுறை ஒன்று நிறுவுவதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் இது வரை குறிப்பிட்ட முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | ICTA இனால் தயாரிக்கப்பட்டிருந்த நடைமுறைக்காக 2021.05.05 ஆந் திகதி சான்றோர் குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் கால வீச்சு உட்பட திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படக் கூடிய தன்னியக்க தண்ட பணம் செலுத்தும் நடைமுறை ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 இன் 10 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்த) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த மோட்டார் வாகன குற்றங்கள் மேற்கொள்ளப்படும் தவணைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தண்டப் பணம் அறவீடு செய்யும் முறை ஒன்று செயற்படுத்துதல் 2019 ஜுன் 20 திகதி முதல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் வாகன குற்றங்கள் தொடர்பாக குற்றவாளிகள் ஒரே குற்றத்தை மேற்கொண்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை தெளிவாக இனங்காணக் கூடிய விதமான தரவுகளை கணனி மயப்படுத்தும் முறைமை ஒன்று இலங்கை பொலிஸினால் செயற்படுத்தப்படாமையால் ஒரே குற்றம் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் குற்றவாளிகளிடம் சரியான தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | ICTA இன் கீழ் இலத்தரனியல் நடைமுறையின் படி செயற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டங்களை மீறக் கூடிய குற்றவாளிகள் அந்த குற்றத்தை மேற்கொள்ளும் தவணைகளின் எண்ணிக்கையை இனங்காணக் கூடியவாறு கணினி தர முறைமை நிறுவப்பட்டு அதன் படி குறிப்பிட்ட தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் சாஜெனட் மற்றும் பொலிஸ் கொஸ்தாபில் உத்தியோகத்தர்களுக்காக 75,000 தொப்பிகள் ரூபா 93,455,119 தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெறுகை செயற்பாடுகளின் போது ஏற்பட்டிருந்த முறையற்ற காரணங்களினால் நடுத்தீர்ப்பின் போது 2017 ஜனவரி 21 ஆந் திகதி வழங்கியிருந்த தீர்ப்பு ஆகிய 75,000 தொப்பிகளுக்கான பணம் மற்றும் அதற்கான ஏனைய கட்டணங்களை செலுத்துதல் என்பவற்றை இலங்கை பொலிஸினால் மறுத்து தொடர்ச்சியாக நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் மாதம் அளவில் இந்த தொப்பிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 191,768,632 தொகையும் ஏனைய கட்டணங்களாக ரூபா 45,316,880 தொகையும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2021 ஜூன் மாதம் அளவிலும் நீதிமன்ற அலுவல்கள் முடிவடைந்திருக்காததுடன் வழங்குனரின் களஞ்சிய கட்டணம், சட்டச் செலவுகள் மற்றும் செலாவணி விகிதாசாரத்தின் அதிகரிப்பின் நட்டம் இலங்கை பொலிஸ் மேற்கொள்ள வேண்டும் என வழங்குனர் கோரியிருந்தார். | 60,000 தொப்பிகள் கொள்வனவு செய்வதற்காக இரு தரப்பினரினதும் இணக்கத்துடன் யோசனை ஒன்று நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக நீதிமன்றத்தில் அங்கீகாரம் கிடைத்தவுடன் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | உத்தியோகத்தர்களுக்கு தேவையான தொப்பிகள் தேவையான சந்தர்ப்பங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொலிஸின் உத்தியோகபூர்வ அலுவல்களுக்காக புதிய ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யும் தேவைப்பாடுகளை இனங்கண்டு 2018 ஆகஸ்ட 08 ஆந் திகதி அமப/18/1650/828/10-1 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 750 ஜீப் வண்டிகள் (விஷேட கருமச் செயலணிக்காக 150 ஜீப் வண்டிகள் | 03 கட்டங்களின் கீழ் 250 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக இணக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. கூறுவிலைகள் அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | ஜீப் வண்டித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட) ரூபா 14,100 மில்லியன் தொகைக்கு இந்தியா கடன் உதவித் திட்டத்தின் அடிப்படையின் கீழ் (Indian Line Credit) கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்கு 250 ஜீப் வண்டிகள் வீதம் 3 வருடங்களில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பெறுகை அலுவல்கள் 2021 ஜூன் மாதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அத்திடிய பொலிஸ் பல்கலைக் கழகத்திற்காக 180 மரக்கட்டில்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2.61 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான தொழிநுட்ப விபரக் குறிப்பில் மரத்தின் வகை, ஒரு கட்டிலின் நீள அகலங்கள் ஆகிய குறைந்த விடயங்கள் மாத்திரம் உட்படுத்தப்பட்டு முழுமையற்ற விவரக் குறிப்பு மீது மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பண்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விவரக் குறிப்புக்கள் தயாரிக்கும் போது சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகளை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான விவரக் குறிப்புக்கள் மீது பண்டக் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி பொலிஸ் வட்டாரத்தை சேர்ந்த 04 பொலிஸ் நிலையங்கள், விடுமுறை களிப்பிடம் ஒன்று பொலிஸுக்கு சொந்தமில்லாத காணியில் பேணப்பட்டு வந்ததுடன் அந்த ஆதனங்களை உரித்தாக்கும் அலுவல்கள் 2021 ஏப்ரல் மாதம் அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக காணிகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | நாரஹேன்பிடி பொலிஸ் வைத்தியசாலையை விரிவு படுத்துவதற்காக 2018 ஆண்டு இறுதி அளவில் ரூபா 334 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 மாடிகளை கொண்ட கட்டிடத்தின் 04 மாடிகள் | பதவியணியினர் போதியளவாக காணப்படாமையால் கட்டடம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | கட்டிடத்தில் குறை பயன்பாடுகள் காணப்படும் மாடிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஜூன் மாதம் வரை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | |
| (இ) | பொலிஸ் கல்வி நிறுவனம் ஒன்று நிறுவுவதற்காக மல்வானையில் அமைந்துள்ள 12 ஏக்கர் 01 ரூட் 8 பர்சஸ் காணி இலங்கை பொலிஸிற்கு உரித்தாக்குவதற்காக 2017 ஜூன் 20 திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஜூன் மாதம் அளவிலும் உரித்தாக்கியிருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்காக காணியை அளவை செய்யும் படி நில அளவையாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸிற்காக ஒதுக்கிய பின்னர் உரித்தாக்கும் அலுவல்கள் ஆரம்பிக்க முடியும். | அமைச்சரவை அங்கீகாரத்தின் படி இந்த காணியின் உரித்தாக்கல் தொடர்பான விடயங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | பொலிஸ் குதிரைப் படைப் பிரிவில் மற்றும் படைவீரர் பாதுகாப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக 2017.09.28 ஆந் திகதி அனுபவிக்கும் உரிமையை ஒப்படைத்திருந்த ஹொரண எல்லகந்தவத்த காணியில் 75 ஏக்கர் காணிப் பகுதி குறிப்பிட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. காணியை சுற்றி வேலி நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேலியை நவீன மயப்படுத்துவதற்காக பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எல்லகந்த வத்த 75 ஏக்கர் காணியை குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் அமைந்துள்ள 04 ஏக்கர் காணியில் சுமார் 02 ஏக்கர் காணிப் பகுதி ஒன்று 1981 ஆண்டு முதல் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த காணியில் பொலிஸ் மாஅதிபரின் களஞ்சியம் ஒன்று நிர்மாணிப்பதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | குறை பயன்பாட்டுடன் காணப்படும் காணியை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பேராதனை பொலிஸ் நிலையத்தை நிறுவுவதற்காக பேராதனை பல்கலைக் கழகத்தினால் 1995 ஜனவரி 04 திகதி வழங்கியிருந்த காணியை திருப்பி ஒப்படைப்பதற்கான இணக்கத்தின் மீது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியில் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 18 திகதி பழைய பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் புதிய பொலிஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணி 2021 ஏப்ரல் மாதம் வரை பொலிஸிற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | இந்த காணியை உரித்தாக்குவதற்காக உயர் கல்வி அமைச்சரினால் கோரிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | காணியை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008.03.19 திகதிய உயர் பயிற்சி பொலிஸ் கல்லூரி மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலையம் நிர்மாணிப்பதற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு இறுதி அளவில் ரூபா 8,895,273 தொகை செலவிடப்பட்டு இருந்த போதிலும் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் பொலிஸிற்கு உரித்தாக்கியிருந்த 06 ஏக்கர் காணியும் தீர்த்துக் கொள்ளப்படாமல் காணப்பட்டது. | உத்தேச ருவன்புர அதிவேக பாதைக்காக காணியின் பகுதி ஒன்று வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. இச் செயற்திட்டம் முன்னெடுத்து செல்லக் கூடிய இயலுமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | ரூபா 8,895,273 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள உயர் பயிற்சி பொலிஸ் கல்லூரி மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலைய நிர்மாண வேலை அலுவல்கள் மீண்டும் ஆரம்பிப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உரித்தாக்கப்பட்டுள்ள 6 ஏக்கர் காணியை விரைவாக தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | ஹபராதுவ ''நிலசெவன'' வீடமைப்புத் திட்டத்தில் இருந்து வீடொன்று ரூபா 3,800,000 வீதம் ரூபா 729,600,000 தொகைக்கு 192 வீடுகள் கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 02 திகதியளவில் ரூபா 500 மில்லியன் தொகை 5 சந்தர்ப்பங்களில் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. முறைசார் விதமாக வேலைகளைப் பூர்த்தி செய்து வீடுகளை ஒப்படைத்தல் தொடர்பான சிக்கல்கள் 2021 மே மாதம் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | முற்பணம் செலுத்தி 02 வருடங்களை மிகைத்துள்ளமையால் வீடுகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக சிக்கல்களை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவீடுகள் | 2020 ஆண்டின் புதிதாக சேர்த்தப்பட்டிருந்த ரூபா 11,005,492 இற்கான கடன் மீதி ஒன்றுடன் கடன் | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாக காணப்பட்ட 3,267 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதியின் கூட்டுத்தொகை ரூபா 74,295,356 தொகையாக காணப்பட்டதுடன் 03 வருடங்களை விட மிகையாக நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,829,167 தொகையாக காணப்பட்டது. | மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 74,295,356 தொகையாக இருந்தது. | |
| (ஆ) | காணாமல் போன அல்லது களவாடப்பட்ட பண்டங்களை இனங்காணும் செய்முறை (SAIS) கீழ் பொலிஸ் வர்த்தமானி III இல் வெளியிடப்பட்டு இது வரை இனங்காண முடியாமல் இருந்த களவாடப்பட்ட பண்டங்களின் கூட்டுத்தொகை மீளாய்வாண்டு இறுதி அளவில் 59,118 தொகையாக இருந்ததுடன், அவற்றில் 29,261 துவிச்சக்கர வண்டிகள், 12,493 துப்பாக்கிகள் 10,390 மோட்டார் வாகனங்கள் மற்றும் 6,974 ஏனைய ஆதனங்கள் காணப்பட்டன. பொலிஸ் நிலையத்தினால் 10 வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டு இது வரை இனங்காண்பதற்கு முடியாமல் இருந்த பண்டங்களின் எண்ணிக்கை 90 சதவீதம் ஆகும். 2020 ஆம் ஆண்டின் போது 45 மோட்டார் சைக்கிள்கள் 17 முச்சக்கர வண்டிகள் உட்பட இந்த இணங்காணும் செய்முறைக்கு அறிவிக்கப்பட்டிருந்த களவாடப்பட்டிருந்த ஆதனங்களின் எண்ணிக்கை 174 ஆகக் காணப்பட்டதுடன், பொலிஸ் நிலைங்களினால் 03 விவசாய உபகரணங்கள் தொடர்பாக மாத்திரம் இனங்காணப்பட்டது என தகவல் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி தகவல் அறிவிப்பதில் தாமதம் மற்றும் காணாமல் போன ஆதனங்களை பொலிஸ் நிலையங்களினால் கண்டுபிடிப்பதில் தாமதங்களும் காணப்பட்டது. | ஆதனங்கள் காணாமல் போதல் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் கிடைத்தது தொடர்பாக குற்றப் பதிவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பொலிஸ் நிலையங்களினால் குறிப்பிட்ட தகவல்கள் வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது பெண்களுக்கு எதிராக அதிகார குற்ற சம்பவங்கள் 595 தொகை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் உள்ளவாறு அவற்றில் 376 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகமான சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்தவை பெண்கள் கற்பழிப்பு, பாரதூரமான காயங்கள் ஏற்படுத்தல், ஆட்கொலைகள் தொடர்புடையவை ஆகும். அந்த குற்றச் செயல்கள் தொடர்பான சம்பவங்கள் முறையே 237 தொகை, 174 தொகை மற்றும் 82 தொகையாக காணப்பட்டதுடன் தீர்த்தலின் சதவீதம் முறையே 41 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 30 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. ஆண்டின் போது பெண்களை கொலை செய்தல் சம்பவங்கள் 82 அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு 57 தொகை தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை மட்டத்தில் காணப்பட்டது. | தற்போது தீர்த்தலின் சதவீதம் இதை விட கூடிய பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | பெண்களுக்கு எதிராக அதிகார குற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் பூர்த்தி செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சிறுவர்களுக்கு எதிராக அதிகார குற்றச் சம்பவங்கள் 3,162 ஆண்டின் போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2003 சம்பவங்கள் தொடர்பாக அதாவது 63 சதவீதத்திற்கான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றில் அதிக சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்தது பெண்கள் கற்பழிப்பு, கடத்தல் மற்றும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் ஆகிய சம்பவங்கள் தொடர்பானவையே. அந்த குற்றச் செயல்கள் தொடர்பான சம்பவங்கள் முறையே 1,638 தொகை, 632 தொகை மற்றும் 615 தொகை ஆகக் காணப்பட்டதுடன் தீர்த்தலின் சதவீதம் முறையே 35 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 43 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதத்தில் காணப்பட்டது. சிறுவர்களுக்கு எதிராக ஆட்கொலை தொடர்புடைய சம்பவங்கள் 22 அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் தீர்த்தலின் சதவீதம் 28 சதவீத | தற்போது தீர்த்தலின் சதவீதம் இதை விட கூடிய பெறுமதியினை கொண்டிருந்தது. | சிறுவர்களுக்கு எதிராக குற்றங்களை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டடத்தில் காணப்பட்டது. அதே போல் சிறுவர்களுக்கு எதிராக ஆட்கொலை செய்வதற்கு முற்படுதல் 09 சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 09 சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | கைதுசெய்யப்படும் சந்தேக நபர்களின் விபரங்களை ஒழுங்குறுத்துவதற்கான புதிய செய்முறை (AMIS) இன் படி குற்றவியல் பிரிவின் தரவுகளுடன் இணக்கங் செய்வதன் மூலம் வேறு குற்றங்களுக்காக தேவையான நபர்களா என உறுதிப்படுத்தப்படுகின்றது. குற்றவியல் பிரிவின் தரவு முறையின் படி மீளாய்வாண்டு இறுதி அளவில் பதிவு செய்யப்பட்டிருந்த குற்றவாளிகள் 56,666 தொகையும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 69,762 தொகையும், தரைப் படையில் இருந்து தப்பிச் சென்றுள்ள 7,657 நபர்களும் வான் படையில் இருந்து தப்பிச் சென்றுள்ள 6,741 நபர்களும் மற்றும் கடற்படையில் இருந்து தப்பிச் சென்றுள்ள 11,437 நபர்களும் ஆக மொத்தம் 152,263 நபர்களின் தகவல்கள் தரவு முறைமையில் காணப்படுகின்றது. இவற்றில் வான் படையில் இருந்து தப்பிச் சென்றுள்ள ஆட்களில் சந்தேக நபர்கள் என இனங்காணப்படல் 25 சதவீதமும், கடற்படையில் இருந்து தப்பிச் சென்றுள்ள ஆட்களில் சந்தேக நபர்கள் என இனங்காணப்படல் 16 சதவீதமும் மற்றும் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் 13 சதவீதமும் காணப்பட்டது. இதன் படி தர முறைமையின் தகவல்கள் ஆட்கள் சந்தேக நபர்கள் என இனங்காணும் போக்கு காணப்படுவதனால் பொலிஸ் நிலைய மட்டத்தில் அவர்களின் அலுவல்களை ஒழுங்குறுத்துவதற்கான தேவைப்பாடு ஒன்று காணப்பட்டது. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | AMIS தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நபர்களின் அலுவல்களை விசாரணை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | போதைப் பொருட்கள் பாவனை செய்யும் நபர்களுக்கு சட்ட ரீதியான தண்டனை விதிப்பதற்கு பிண்ணனி ஒன்று தயாரித்திருக்காததுடன் அவ்வாறான நபர்களை இனங்காண்பதற்கான உபகரணங்கள் பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திலும் பொலிஸ் நிலையங்களிலும் காணப்படவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | போதைப் பொருட்களை பாவனை செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக சட்டங்கள் தயாரித்தல் மற்றும் உரிய பிரிவுகளுக்கு உபகரணங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | போதைப் பொருட்களை இனங்காண்பதற்காக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் போது அறிக்கைகள் கிடைப்பது 03-06 மாதங்களுக்கு இடைப்பட்ட கால தாமதமாகிய 08 சந்தர்ப்பங்களும், 06 மாதங்களை மிகைத்து கால தாமதமாக 70 கடந்த சந்தர்ப்பங்களும் இனங்காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக போதைப் பொருட்களை இனங்காண்பதற்காக விரைவான மற்றும் முறையான வேலைத் திட்டம் ஒன்றின் தேவைப்பாடு ஒன்று காணப்பட்டது. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | போதைப் பொருட்களை இனங்காணும் செய்முறையை விரைவுபடுத்த வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது பயங்கர விபத்துகள் 95 மிகைத்து மற்றும் பாரதூரமான காயங்களுடனான விபத்துக்கள் 300 ஐ மிகைத்து 04 பொலிஸ் வட்டாரங்களில் காணப்பட்டதுடன் அவை அனுராதபுரம், கம்பஹா, குருநாகல் மற்றும் நுகேகொட ஆகிய பொலிஸ் வட்டாரங்கள் ஆகும். இந்த 04 பொலிஸ் வட்டாரங்களில் ஏற்படும் பயங்கரமான மற்றும் பாரதூரமான விபத்துக்களின் எண்ணிக்கை மொத்த பயங்கரமான மற்றும் பாரதூரமான விபத்துக்களின் எண்ணிக்கையில் 20 சதவீதத்தை மிகைத்து 2018-2020 காலங்கள் பூராகவும் காணப்பட்டமையால் விபத்துக்களை குறைப்பதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டியிருந்தது. | பின்னர் பதில் அனுப்பப்படும். | பயங்கரமான மற்றும் பாரதூரமான விபத்துக்கள் கூடிய பெறுமதியை கொண்டுள்ள பொலிஸ் பிரிவுகளில் அந்த விபத்துக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2020 ஆண்டு தொடர்பாக சந்தேக நபர்களை இனங்காணாத விபத்துக்களின் எண்ணிக்கை தொடர்பாக தகவல்கள் மோட்டார் | பின்னர் பதில் அனுப்பப்படும். | சந்தேக நபர்களை இனங்காணாத விபத்துக்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகன கட்டுப்பாட்டு மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஒ) | சிலாபம் பொலிஸ் வட்டாரத்தின் 06 பொலிஸ் நிலையங்களில் மற்றும் அனுராதபுர பொலிஸ் வட்டாரத்தின் இரண்டு பொலிஸ் நிலையங்களில் வேக எல்லையை பரிசோதிக்கும் உபகரணங்கள் 10 வருடங்களுக்கும் மிகையாக/ பழைமை வாய்ந்தவையாக காணப்பட்டமையால் அவை செயற்படாமல் இருப்பதனால் வேக எல்லை தொடர்பான வழக்குகள் பெற்றிருக்காததுடன், பொலன்னறுவ பொலிஸ் வட்டாரத்தில் இரண்டு பொலிஸ் நிலையங்களில் வேக எல்லையை அளவீடு செய்யும் உபகரணங்கள் காணப்பட்ட போதிலும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் வேக எல்லை தொடர்பான வழக்குகள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | பின்னர் பதில் அனுப்பப்படும். | வேக எல்லை மீறியமை தொடர்பாக பரிசோதனை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நெருங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இலங்கை பொலிஸ் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 04 இன் கீழ் 08 இலக்குகள் இனங்கண்டிருந்தது. அடிப்படை ஆண்டாக 2016 பயன்படுத்தி குறிகாட்டிகளை கட்டியெழுப்புதல் மேற்கொள்ளப்பட்டுக் காணப்பட்ட போதிலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நெருங்கும் போது குறிப்பிட்ட கருமங்களை ஒழுங்குருத்துவதற்காக தேவையான திருப்பு முனைகளை இனங்கண்டிருக்கவில்லை. | பதில் அளித்திருக்கவில்லை. | தேவையான திருப்பு முனைகளை இனங்கண்டு ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017-2020 காலப் பகுதியில் பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் 2020 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 16 இல் 15 உம் வெற்றிடமாகக் காணப்பட்டது. | பரீட்சை திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேவைக்காக 2020 ஆம் ஆண்டின் போது உப பொலிஸ் பரிசோதக உத்தியோகத்தர் 23 உம், பெண் உப பொலிஸ் பரிசோதக உத்தியோகத்தர் 06 உம், புதிய ஆட்சேர்ப்பின் கீழ் சேர்க்கப்பட்ட பின்னரும் உதவிச் சேவை பதவியணியில் 14 பதவிகளுக்காக மேலும் காணப்படும் வெற்றிடங்களுக்காக 3,923 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை இலங்கை பொலிஸில் மருத்துவ பிரிவு, கட்டடப் பிரிவு, தகவல் தொழிநுட்ப பிரிவு போன்ற பிரிவுகளின் கடமைகள் உச்சமட்ட செயற்திறனுடன் மேற்கொண்டு வருவத தடை ஒன்றாக காணப்பட்டது. | உதவிச் சேவை திறன்தொழிலாளர் 34 தொடர்பாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் வெற்றிடங்களை நிரப்புதல் பயிலுனர்களை சேர்த்துக் கொள்ளும் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. | உதவிச் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிவில் பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடமாக 14 பதவிகள் காணப்பட்டதுடன் இலங்கை திட்டமிடல் சேவையின் III வகுப்பைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் III வகுப்பைச் சேர்ந்த 12 உத்தியோகத்தர்களினதும் மூன்றாம் மட்டத்தில் அரச முகாமைத்துவ சேவை உதவியாளர் உயர் தரத்தை சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் 06 உம் வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்த நிலைமை இலங்கை பொலிஸின் திட்டமிடல் அலுவல்கள், கணக்காளர் அலுவல்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவ அலுவல்களை பேணிச் செல்வதற்கு தடையாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய பிரிவுகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | சிவில் பதவியணியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |